**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கடலூர்மாவட்டம், கடலூர்.**

**முன்னிலை : திரு. S. ஜவகர், B.L.,**

**முதன்மை மாவட்ட நீதிபதி, கடலூர்.**

**2022-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 12-ஆம் நாள் செவ்வாய் கிழமை**

**அசல் வழக்கு எண்.55/2006-ல்**

**வழக்கிடை மனு எண்.153/2022**

வசந்தா .. மனுதாரர்/ 6 ஆம் பிரதிவாதி

/எதிராக/

ஸ்ரீ ராகவம்மாள் அறக்கட்டளை

அதன் சார்பாக அறங்காவலர்கள்

1. ஏகாம்பர குருக்கள்

2. முத்துகுமாரசாமி குருக்கள்

3. ஞானசேகரன் (எ) சேகர் குருக்கள் .. எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனுவானது என் முன்பு 01.04.2022 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எஸ். இராம்மோகன் அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.பி.வேலு அவர்களும் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பின்வருமாறு வழங்கும்

**உத்தரவு**

இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை உரிய காலத்தில், மேற்படி அசல் வழக்கு எண்.55/2006-ல் தாக்கல் செய்யாததால் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து, மேற்படி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள உத்தரவிடக்கோரி, மனுதாரர், உரிமையியல்

விசாரணை முறைச்சட்டம் கட்டளை-8 விதி-3 (1A) உடன் இணைந்த பிரிவு 151-கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

**மனுவின் சுருக்கம் பின்வருமாறு** :

2. மனுதாரர், மேற்படி அசல் வழக்கில் 6-ஆம் பிரதிவாதி ஆவார். எதிர்மனுதாரர்கள், இந்த மனுதாரருக்கு எதிராக தாவா சொத்தினை பொறுத்து விளம்புகை பரிகாரம் மற்றும் சுவாதீனத்தை திரும்ப பெறவதற்கான பரிகாரமும் கோரி மேற்படி அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார். மேற்படி அசல் வழக்கில் இம்மனுதாரர் எதிர்வழக்குரை தாக்கல் செய்து வழக்கு நடத்தி வருகிறார். மேற்படி தாவா வழக்கானது, பிரதிவாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்காக வைக்கப்பட்டிருந்தது. மனுதாரர் தரப்பு வழக்கினை நிரூபிப்பதற்கான சில முக்கியமான ஆவணங்கள் தற்போது தான் கிடைத்துள்ளன. முன்னதாக ஆவணங்களை தாக்கல் செய்வதில் மனுதாரர் அலட்சியமாகவோ, அலட்சியமாகவோ இருக்கவில்லை. இந்த ஆவணங்களை பெற்றுக்கொள்ளாவிட்டால், மனுதாரருக்கு ஈடு செய்யமுடியாத அளவிற்கு பெருத்த கஷ்டமும் நஷ்டமும் ஏற்படும். எனவே, மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாததை மன்னித்து, ஆவணங்களை பெற்றுக்கொள்ள உத்தரவிடவேண்டுமாய் பிரார்த்திக்கிறார்.

3. **3-வது எதிர்மனுதாரர் தாக்கல் செய்து, மற்ற எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொண்ட எதிர் உரையின் சுருக்கம்** :

மனுதாரர்/6-ஆம் பிரதிவாதி தாக்கல் செய்ட கட்டளை-8, விதி 3(1 எ) மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கதக்காமல் செலவுடன் முதல் நிலையில் தள்ளுபடிக்கு அருகமானது. இந்த வழக்கில் மனுதாரர்/6-ஆம் பிரதிவாதி தாக்கல் செய்யும் ஆவணங்கள் அனைத்தும் காலம் கடந்து தாக்கல் செய்கிறார். மேற்படி ஆவணங்கள் இந்த வழக்கின் சாட்சியத்தில் irrelevant and in admissible ஆகும். மனுதாரர் தாக்கல் செய்யும் ஆவணங்கள்

அனைத்தும் அசல் வழக்கின் சொத்திற்கும், வழக்கிற்கும் எந்த விதத்திலும் சம்மந்தம் இல்லை. எனவே, மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமாய் பிரார்த்திக்கிறார்.

4. **<u>இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனையாதெனில்</u>** :

மனுதாரர் மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**<u>பிரச்சனை</u>** :

5. இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை உரிய காலத்தில், மேற்படி அசல் வழக்கு எண்.55/2006-ல் தாக்கல் செய்யாததால் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து, மேற்படி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள உத்தரவிடக்கோரி, மனுதாரர், உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை-8 விதி-3 (1A) உடன் இணைந்த பிரிவு 151-கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

6. மனுதாரர் தரப்பில், எதிர்மனுதாரர்கள், இந்த மனுதாரருக்கு எதிராக தாவா சொத்தினை பொறுத்து விளம்புகை பரிகாரம் மற்றும் சுவாதீனத்தை திரும்ப பெறவதற்கான பரிகாரமும் கோரி மேற்படி அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி அசல் வழக்கில் இம்மனுதாரர் எதிர்வழக்குரை தாக்கல் செய்து வழக்கு நடத்தி வருகிறார் என்றும், மேற்படி தாவா வழக்கானது, பிரதிவாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்காக வைக்கப்பட்டிருந்தது என்றும், மனுதாரர் தரப்பு வழக்கினை நிரூபிப்பதற்கான சில முக்கியமான ஆவணங்கள் தற்போது தான் கிடைத்துள்ளன என்றும், முன்னதாக ஆவணங்களை தாக்கல் செய்வதில் மனுதாரர் அலட்சியமாகவோ, அலட்சியமாகவோ இருக்கவில்லை. இந்த ஆவணங்களை பெற்றுக்கொள்ளாவிட்டால், மனுதாரருக்கு ஈடு செய்யமுடியாத அளவிற்கு பெருத்த கஷ்டமும் நஷ்டமும் ஏற்படும் என்றும், எனவே, மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாததை

மன்னித்து, ஆவணங்களை பெற்றுக்கொள்ள உத்தரவிடவேண்டுமாய் வாதிடப்பட்டது.

7. எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரர் ஆவணங்களை காலம் கடந்து தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர் தன் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் இந்த வழக்கிற்கு பொருத்தமற்றது மற்றும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும், எனவே, மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டுமாய் வாதிடப்பட்டது.

8. இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. எதிர்மனுதாரர்கள்/வாதிகள், இம்மனுதாரருக்கும் மற்ற பிரதிவாதிகளுக்கும் எதிராக தாவா சொத்தில் விளம்புகை பரிகாரம் கோரியும், சொத்தை மீட்டெடுக்கும் பரிகாரம் கோரியும் மற்ற இதர பரிகாரங்கள் கோரியும் மேற்படி அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளனர் என்பதும், மனுதாரர் மேற்படி அசல் வழக்கில் 6-ஆம் பிரதிவாதி என்பதும், பிரதிவாதிகள் தரப்பில் எதிர்கட்சி செய்து வழக்கு நடத்தி வருகின்றனர் என்பதும், மேற்படி அசல் வழக்கனாது பிரதிவாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்காக வாய்தா வைக்கப்பட்டிருந்த நிலையில், இம்மனுதாரர், தன் தரப்பு வழக்கினை நிரூபிப்பதற்கான சில முக்கியமான ஆவணங்கள் தற்போது தான் கிடைத்துள்ளன என்றும், முன்னதாக ஆவணங்களை தாக்கல் செய்வதில் தான் அலட்சியமாகவோ, அலட்சியமாகவோ இருக்கவில்லை என்றும், எனவே, மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாததை மன்னித்து, ஆவணங்களை பெற்றுக்கொள்ள உத்தரவிடவேண்டும் என்றும், இல்லையேல் தங்களுக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும் என்றும் கூறி, இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார், எதிர்மனுதாரர், மனுவின் சங்கதிகளையும், ஆவணங்களையும் குறித்து ஆட்சேபணை தெரிவித்திருந்தபோதிலும், வழக்கின் தன்மைகளையும், சூழ்நிலைகளையும், மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதிகள் தரப்பு சாட்சி விசாரணக்காக வைக்கப்பட்டுள்ளதையும், அசல் வழக்கானது 2006-ஆம் ஆண்டு வழக்கு என்பதையும்

கருத்தில் கொண்டு, இம்மனுவினை நிபந்தனையின்பேரில் அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்றும், இம்மனுவினை அனுமதிப்பதினால், வழக்கில் முரண்பாடற்ற, சட்ட சிக்கலின்றி தீர்வுக் காண்பதற்கு ஏதுவாக இருக்கும் என்றும், தீர்மானித்து இவ்வாறாக இந்த மனுவில் பிரச்சனைக்குத் தீர்வுக் காணப்படுகிறது.

10. முடிவாக, மனுதாரர்/6-ஆம் பிரதிவாதி, எதிர்மனுதாரர்களுக்கு வழக்கு செலவுத் தொகையாக ரூ.250/-ஐ வரும் 19.04.2022 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்த வேண்டும் என்றும், அவ்வாறு செலவுத்தொகையை செலுத்த தவறும்பட்சத்தில் இம்மனுவானது தம்மிச்சையாக தள்ளுபடியாகிவிடும் என்ற நிபந்தனையின்பேரில் இம்மனுவை அனுமதித்து, உத்தரவிடப்படுகிறது. அழைக்க - 20.04.2022

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரிடையாக உரைக்கப்பட்டு, அவரால் நேரிடையாகக் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2022-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 12-ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

S JAWAHAR Digitally signed by S JAWAHAR Date: 2022.05.02 13:44:04 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

கடலூர்.

**இணைப்பு** :

**மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்** : இல்லை

S JAWAHAR Digitally signed by S JAWAHAR Date: 2022.05.02 13:44:11 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

கடலூர்.